# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 100

## தமிழ்

வகுப்பு - எட்டு - ____________ நேரம்: 2.30மணி

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** **15 × 1 = 15**

1. காட்டிலிருந்து வந்த ____________ கரும்பைத் தின்றன.
   அ) முகில்கள் ஆ) முடிவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்
2. விகாரப் புணர்ச்சி ____________ வகைப்படும்.
   அ) ஐந்து ஆ) நான்கு இ) மூன்று ஈ) இரண்டு
3. மறைபொருளைக் காத்தல் ____________ எனப்படும்.
   அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை
4. சேரர்களின் தலைநகரம் ____________
   அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி
5. பானை ____________ ஒரு சிறந்த கலையாகும்.
   அ) செய்தல் ஆ) வனைதல் இ) முடைதல் ஈ) சுடுதல்
6. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் ____________
   அ) பெருமழை ஆ) சிறுமழை
   இ) எடை மிகுந்த மழை ஈ) எடை குறைந்த மழை
7. வளர்பிறை என்பது ____________
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) வேற்றுமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
8. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ____________ எல்லாம் முளைத்தன.
   அ) சத்துகள் ஆ) பித்துகள் இ) முத்துகள் ஈ) வித்துகள்
9. சொல்வளமும், நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ____________ தகுதி அறிந்து பேச வேண்டும்.
   அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்
10. இன்றைய கல்வி ____________ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
    அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்
11. ‘பாலாடை’ - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ____________
    அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

12. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ______________

அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்

இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

13. ‘ஆன்பொருநை’ என்று அழைக்கப்படும் ஆறு ______________

அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி

14. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ______________ ஆகும்.

அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள்

இ) பயனிலை ஈ) வேற்றுமை

15. பசியால் வாடும் ______________ உணவளித்தல் நமது கடமை.

அ) பிரிந்தவர்க்கு ஆ) அலந்தவர்க்கு இ) சிறந்தவர்க்கு ஈ) உயர்ந்தவர்க்கு

## II. நிரப்புக. 5 × 1 = 5

16. சேரர்களின் நாடு ______________ எனப்பட்டது.
17. கலப்பில் ______________ உண்டென்பது இயற்கை நுட்பம்.
18. பின்னலாடை நகரமாக ______________ விளங்குகிறது.
19. ‘மாங்கனி நகரம்’ என்று அழைக்கப்படும் நகரம் ______________
20. சுங்குடிச் சேலைகளுக்குப் புகழ்பெற்ற ஊர் ______________

## III. பொருத்துக. 5 × 1 = 5

| | | |
|---|---|---|
| 21. பெயரெச்சத்தொடர் | - | கார்குழலி படித்தாள் |
| 22. வினையெச்சத்தொடர் | - | புலவரே வருக |
| 23. வினைமுற்றுத்தொடர் | - | பாடி முடித்தான் |
| 24. எழுவாய்த்தொடர் | - | எழுதிய பாடல் |
| 25. விளித்தொடர் | - | வென்றான் சோழன் |

## IV. மனப்பாடப்பாடல். 4 + 2 = 6

26. ‘பாடறிந்து ஒழுகுதல்’ பாடலை அடிபிறழாமல் எழுதுக.
27. ‘அறிந்து’ என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

## V. கடிதம் வரைக. 1 × 5 = 5

28. இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

## VI. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 7 × 2 = 14

29. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
30. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
31. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
32. பனையோலைகளால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
33. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?
34. சிறந்த சொல்லாற்றலின் இயல்பு என்ன?

35. உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?

36. ‘தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

**VII. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

37. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?

38. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

39. அறிவியல் கல்வி பற்றி திரு.வி.க கூறுவன யாவை?

40. தொகைநிலைத்தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**VIII. நெடுவினா.** 1 × 5 = 5

41. கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.

**IX. பேச்சுவழக்கு சொற்களை எழுத்துவழக்கு சொற்களாக மாற்றுக.** 10 × 1 = 10

42. வாசலெல்லாம்
43. தீரலையே
44. பேயவில்லை
45. பெண்டுகளே
46. பேயுதைய்யா
47. பூக்கலையே
48. காட்டிலதான்
49. நிற்குதம்மா
50. மணக்கலையே
51. இரங்கலையே

**X. கலைந்துள்ள சொற்களை வரிசைப்படுத்துக.** 10 × 1 = 10

(டு, பி ஆகிய இரு எழுத்துகளையும் சேர்த்துக் கொள்ளலாம்)

52. பாற் -
53. னொன்ட் -
54. நிங்கலகண் -
55. ப்பூச்சிக்கா -
56. தத்தளைத்ட் -
57. கண்கடுல்ப்ட் -
58. த்தடிமால் -
59. க்வெட்கம் -
60. கொறகு -
61. டிதொட்ப் -

**XI. வினாக்களுக்கு ஏற்ப விடையளி.**

62. சொல்லுருபுகளை இட்டு நிரப்புக. 5 × 1 = 5

(கொண்டு, இருந்து, உடைய, காட்டிலும், ஆக, நின்று, உடன், விட, பொருட்டு)

அ) இடி _______________ மழை வந்தது.

ஆ) யாழ், தமிழர் _______________ இசைக்கருவிகளுள் ஒன்று.

இ) மலர்விழி தேர்வின் _______________ ஆயத்தமானாள்.

ஈ) தமிழைக் _______________ சுவையான மொழியுண்டோ?

உ) அருவி மலையில் _______________ வீழ்ந்தது.

63. இணைச்சொற்களை இட்டு நிரப்புக. 5 × 1 = 5

(மேடுபள்ளம், ஈடுஇணை, கல்விகேள்வி, போற்றிப்புகழ்ப்பட, வாழ்வுத்தாழ்வு, ஆடிஅசைந்து)

அ) ஆற்று வெள்ளம் _______________ பாராமல் ஓடியது.

ஆ) திருவிழாவில் யானை _______________ வந்தது.

இ) சான்றோர் எனப்படுபவர் _______________ களில் சிறந்தவர் ஆவர்.

ஈ) தமிழ் இலக்கியங்களை பெருமைக்கு _______________ இல்லை.

உ) இசைக்கலைஞர்கள் _______________ வேண்டியவர்கள்.

64. ‘மை’ விகுதி சொற்களை எழுதுக. **6 × 1 = 6**

அ) _______________

ஆ) _______________

இ) _______________

ஈ) _______________

உ) _______________

ஊ) _______________